**17.11.2021**

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு நகராட்சியில் தற்போதுள்ள மொத்த தெருவிளக்குகள் 5198 (LED விளக்குகள் –1542 LED அல்லாத இதர விளக்குகள் 3656) இயக்கி பராமரிக்க தற்போது நகராட்சியில் உள்ள 4 மின்கம்பியாளர்கள் மற்றும் 2 மின்கம்பி உதவியாளர் போக மீதமுள்ள இடைவெளிக்கு கீழ்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

| வ. எண் | பணியாளரின் பதவி | மொத்தமுள்ள 5198 (LED விளக்குகள் –1542 LED அல்லாத இதர விளக்குகள் 3656) தெருவிளக்குகளுக்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை | இடைவெளி |
|---|---|---|---|---|
| 1 | மின்கம்பியாளர் | 7 | 4 | 3 |
| 2 | மின் கம்பி உதவியாளர் | 7 | 2 | 5 |

திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள அனைத்து தெருவிளக்குகளையும் இயக்கி பராமரித்தல் பணிக்கு நகராட்சி நிரந்தர பணியாளர்கள் போக மீதமுள்ள இடைவெளிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021 மற்றும் 16.11.2021–இல் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி, தேவைப்படும் பணியாளர்களை புற ஆதார முறையில் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திகொள்ள மதிப்பீடு ஓர் ஆண்டிற்கு ரூ.20.92 இலட்சத்திற்கு (ஒப்பந்தப்புள்ளி விலை ரூ. 17.65 இலட்சம்) தயார் செய்யப்பட்டு பார்வை 2–இல் காணும் இந்நகர்மன்றத் தீர்மானத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டவாறு தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவைப்படும் பணியாளர்களை புற ஆதார முறையில் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திகொள்ள உரிய நிர்வாக அனுமதி வழங்க வேண்டி கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.6629/2021/இ1)**

**பொருள் எண்.2**

திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள பொதுமக்களுக்கு தேவைப்படும் குடிநீரை வழங்குவதற்கு தற்போதுள்ள 1 தலைமை நீரேற்று நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம், 2 நீர் உந்து நிலையம், 18கி.மீ தூர பிரதான குடிநீர் குழாய், 148.143 கி.மீ தூர குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் 19 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் ஆகியவற்றை இயக்கி பராமரிக்க நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லை.

எனவே திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள உள்ள பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீரான முறையில் வழங்க, குடிநீர் இயக்கம் மற்றும் பராமரித்தல் பணிக்கு நகராட்சி நிரந்தர பணியாளர்கள் போக மீதமுள்ள இடைவெளிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021 மற்றும் 16.11.2021–இல் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி, தேவைப்படும் பணியாளர்களை புற ஆதார முறையில் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திகொள்ள மதிப்பீடு ஓர் ஆண்டிற்கு ரூ.151.43 இலட்சத்திற்கு (ஒப்பந்தப்புள்ளி விலை ரூ.127.77 இலட்சம்) தயார் செய்யப்பட்டு பார்வை 2–இல் காணும் இந்நகர்மன்றத் தீர்மானத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டவாறு குடிநீர் இயக்கம் மற்றும் பராமரித்தல் பணிக்களுக்கு தேவைப்படும் பணியாளர்களை புற ஆதார முறையில் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திகொள்ள உரிய நிர்வாக அனுமதி வழங்க வேண்டி கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.6629/2021/இ1)**

**பொருள் எண்.3**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி, திருச்செங்கோடு நகராட்சி பகுதிகளில் புற ஆதார முறையில் சுகாதார பணிகள் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள பிரேரணை தயார் செய்யப்பட்டு அதன்படி தேவைப்படும் தூய்மை பணியாளர்கள் – 128 நபர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் –11 நபர்கள், ஓட்டுநர்கள்–7 நபர்கள், மின்னாளர் நிலை II – 1 நபர், ஆக மொத்தம் 147 பணியாளர்களுக்கு ஓர் ஆண்டிற்கு மதிப்பீடு தொகை ரூ.255.07 லட்சம் மற்றும் படிகள் ரூ.47.22 லட்சம் ஆக மொத்தம் மதிப்பீடு ரூ.302.29 லட்சத்திற்க்கு பிரேரணைகள் தயார் செய்யப்பட்டு உரிய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதி மற்றும் SUC நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.6545/2021/எச்1)**

**பொருள் எண்.4**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் 24.08.2021–ஆம் தேதியன்று சட்டப்பேரவையில், அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகளில் ரூ.1000.00கோடி மதிப்பீட்டில் சமுதாயக்கூடங்கள், சந்தைகள், நவீன நூலகங்கள் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் "**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்**" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதாகவும், இத்திட்டத்தில் தொடர்பு நிறுவனமாக ( Nodel Agency) டுபிட்கோ செயல்படும் எனவும் அரசாணை எண்.70, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.09.2021–இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள கீழ்கண்ட மண்சாலைகளை தார்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை மாற்றம் செய்தல் மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைத்தல் பணிக்கு அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.10.2021 அரசாணையின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | தார் சாலை | | மழைநீர் வடிகால் | | சிறுபாலம் | | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | |
| **தார் சாலை** | | | | | | | | |
| 1 | திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.1 சண்முகபுரம் அங்கன்வாடி பள்ளி பின்புறம் பகுதி 054002R063, சண்முகபுரம் சாலை சம்மர் இந்தியா 3வது கிராஸ் ரோடு 054002R065, காயத்திரி லைன் கிராஸ் 1 . 054002R074,கே.எஸ்.ஆர் லைன் சாலை முதல் பி.எஸ்.என்.எல் 054002R075 ஆகிய பகுதிகளில் தார்சாலை, மழைநீர் வடிகால் மற்றும் கல்வெட்டு அமைக்கும் பணி | 0.988 | 5.000 | 0.280 | 0.850 | 8.00 | 1.000 | 81.85 |
| 2 | திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.9 எட்டிமடைப்புதூர் ரோடு பொதுகழிப்பிடம் 3வது கிராஸ் 054004S003 பகுதியில் தார்சாலைஅமைக்கும் பணி | 0.1145 | 4.00 | - | - | - | - | 6.10 |
| 3 | திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.9 பால்கரகுப்பண்ணகாடு கிராஸ் 2 054009R209 பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 0.1270 | 4.20 | - | - | - | - | 7.10 |

| வ. எண் | பணியின் பெயர் | தார் சாலை | | மழைநீர் வடிகால் | | சிறுபாலம் | | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | |
| | **தார் சாலை** | | | | | | | |
| | | | | | | | | |
| 4 | திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.11 வேளாளர் காலனி தெரு எண்.3 கதவு எண்.42/3எ–4 வீடு வரை 054011R232, வேளாளர் காலனி தெரு இறுதி 054011R233,வேளாளர் தெரு 2 முதல் கதவு எண்.55/3–7 வீடு வரை 054011சு239, வெள்ளாப்பட்டி ஜீவாநகர் (பொட்டுசாமி கோவில் பின்புறம்) 054011R240,வெள்ளாப்பட்டி 054011R256,கூட்டப்பள்ளி முதல் வேளாளர் காலனி தெரு எண்.3 வரை 054011R257,கூட்டப்பள்ளி 054011R260,வேளாளர் காலனி தெரு எண்.2 (எஸ்.வி.எஸ் அப்பார்ட் மெண்ட்) 054011R262,வேளாளர் காலனி தெரு எண்.1 1 From 39 To Dno 2L/1 054011R265, வேளாளர் காலனி From 40/2/C/7 To end of street 054011R266,கூட்டப்பள்ளி முதல் வேளாளர் காலனி வரை 35/1 D no To 22/2 054011R267, கூட்டப்பள்ளி முதல் வேளாளர் காலனி தெரு எண்.3 இறுதி வரை 054011R268, கூட்டப்பள்ளி பிருந்தாவன் தெரு வரை From 51/6 To D no.1 A 054011R275 ஆகிய பகுதிகளில் தார்சாலை, மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 1.5029 | 4.20 to 5 | 0.08 | 0.85 | - | - | 106.08 |
| 5 | திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.12 கூட்டப்பள்ளி குடித்தெரு 1 054012R289,கூட்டப்பள்ளி குடித்தெரு 3 054012R290 ஆகிய பகுதிகளில் தார்சாலை, மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 0.2611 | 5 | 0.1951 | 0.85 | - | - | 23.40 |
| 6 | திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.28 குள்ளவனங்காடு தெரு எண்.1 054028R531,குள்ளவனங்காடு தெரு எண்.2 054028R532,குள்ளவனங்காடு தெரு எண்.3 054028R533,குள்ளவனங்காடு 054028R534, பாலிக்காடு 054028R537 ஆகிய பகுதிகளில் தார்சாலை, மழைநீர் வடிகால் மற்றும் கல்வெட்டு அமைக்கும் பணி | 0.798 | 5 | 0.56 | 1 | 12.00 | 3.3 | 78.30 |
| 7 | திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.31 மலைச்சுத்தி ரோடு முதல் செங்காலைகாடு வரை 054031R658,மொளசி ரோடு கிராஸ் தெரு எண். 2 054031R662,மொளசி ரோடு கிராஸ் தெரு எண். 3 To D no 84 054031R663, மொளசி ரோடு கிராஸ் தெரு எண். 4 To Door no 84/1/3 054031R664 ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | 0.467 | 4 to 5 | - | - | - | - | 28.50 |
| | தார் சாலை மொத்தம் | 4.2586 | | 1.1151 | | 20.00 | | 331.33 |

| வ. எண் | பணியின் பெயர் | தார் சாலை | | மழைநீர் வடிகால் | | சிறுபாலம் | | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | |
| பேவர் பிளாக் சாலை | | | | | | | | |
| | | | | | | | | |
| 8 | திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.**01** துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.**1** 054001L01, துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.**2** 054001L02,துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.**3** 054001L03, துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.**4** 054001L04, துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.**5** 054001L05, துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.**6** 054001L06, துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.7. 054001L07, துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.**8**.054001L08, துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.**9** 054001L09, துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.**10** 054001L10,துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.**11** 054001L11, துப்பரவு பணியாளர்காலனி தெரு எண்.**12** 054001L12 ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை , மழைநீர் வடிகால் மற்றும் கல்வெட்டு அமைக்கும் பணி | 0.422 | 3 | 0.329 | 0.65 | 36.00 | 1.35 | 32.50 |
| | | | | | | | | |
| 9 | திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.**02**செங்கோடம்பாளையம் சாலை வாசு டீ கடை வடக்கு பகுதியில் 054002R078 ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை , மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 0.0882 | 4.2 | 0.0882 | 0.65 | - | - | 8.00 |
| | | | | | | | | |
| 10 | திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.**11** கீழேரிப்பட்டி கழிப்பிடம் அருகில் 054011R250,கீழேரிப்பட்டி சுப்பரமணியர் வீடு பகுதியில் 054011S021 ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 0.1259 | 3.8 to 5 | - | - | - | - | 12.72 |

மேற்படி "**<u>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்</u>**"–ன் திட்டத்தின் கீழ் மண்சாலைகளை தார்சாலை மற்றும் பேவர்பிளாக் சாலை மாற்றம் செய்தல் மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைக்க **வ. எண் 1, 4 மற்றும் 6** ஆகிய பணிக்கான விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு உரிய தொழில்நுட்ப அனுமதி வழங்கக்கோரி தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,சென்னைஅவர்களுக்கும் மற்றும் **வ. எண்7 மற்றும் 8** ஆகிய பணிக்கான விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு உரிய தொழில்நுட்ப அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர்,நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், அரிசிபாளையம், சேலம் அவர்களுக்கும் விரிவான திட்ட மதிப்பீடுகள் சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.6818/2021/இ1)**

**பொருள் எண்.5**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் **24.08.2021–**ஆம் தேதியன்று சட்டப்பேரவையில், அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகளில் ரூ.**1000.00**கோடி மதிப்பீட்டில் சமுதாயக்கூடங்கள், சந்தைகள், நவீன நூலகங்கள் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் "**<u>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்</u>**" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதாகவும், இத்திட்டத்தில் தொடர்பு நிறுவனமாக ( Nodel Agency) டுபிட்கோ செயல்படும் எனவும் அரசாணை எண்.**70**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். **13.09.2021 –**இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**30**,( Ward -D-Block no.36) கொல்லப்பட்டி பூங்காவை மேம்படுத்துதல் பணிக்கு அரசாணை எண்.**92**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். **30.10.2021** அரசாணையின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 30 | திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30, (Ward – D -Block no.36) கொல்லப்பட்டி பூங்காவை மேம்படுத்துதல் | 60.00 |
| | | **மொத்தம்** | **60.00** |

மேற்படி "**<u>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்</u>**"–ன் திட்டத்தின் கீழ் திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**30**,( Ward -D-Block no.36) கொல்லப்பட்டி பூங்காவை மேம்படுத்துதல் பணிக்கான விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு உரிய தொழில்நுட்ப அனுமதி வழங்க தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.6818/2021/இ1)**

**பொருள் எண்.6**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட **3** ஏரி மற்றும் குளங்களை மேம்படுத்தும் பணிகளை மூலதன மானியநிதி (Captial Grant Fund - CGF) – இன் மேற்கொள்ள பிரேரணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட **3** ஏரி மற்றும் குளங்களை மேம்படுத்தும் பணிகளை மூலதன மானியநிதி (Captial Grant Fund - CGF)–இன் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 31 | திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட மலையடிக்குட்டை (Ward-C Block-16 TSLR No.19) மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | 80.00 |
| 2 | 10 | திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட சூரியம்பாளையம் குட்டை (Ward-E Block-15 TSLR no.32) மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | 235.00 |
| 3 | 14 | திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட ராஜகவுண்டம்பாளையம் ஏரி (Ward –E Block-8 TSLR No.121) மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | 259.00 |
| | | **மொத்தம்** | **574.00** |

மேற்படி மூலதன மானியநிதி (Capital Grant Fund - CGF) திட்டத்தின் கீழ் திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட மேற்கண்ட **3** ஏரி மற்றும் குளங்களை மேம்படுத்தும் பணிக்கான விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு உரிய தொழில்நுட்ப அனுமதி வழங்க தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.6818/2021/இ1)**

**பொருள் எண்.7**

நகர்மன்ற தீர்மான எண். 315, நாள்.22.10.2021—இல் ரூ.30000/— வருவாய் நிதி 2021—22—இன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 17.11.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சி அலுவலகம், அம்மா உணவகம், நீரேற்று நிலையம், நீருந்து நிலையம் மற்றும் அனிமூர் உரக்கிடங்கு ஆகியவற்றில் உள்ள தீயணைப்பு கருவிகளை Refilling செய்து புதுப்பிக்கும் பணி | ரூ.30000/- | 1. M/s Kanchi Fire Safety Equipements, Tiruchengode<br>2. M/s. Karthi Fire Safety Namakkal | (-)0. 10% குறைவு<br>(+) 0.50 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :**

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (—)0.10% குறைவாக கொடுத்துள்ள M/s Kanchi Fire Safety Equipements, Tiruchengode நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

**(கோப்பு எண்.2500/2019/இ1)**

**பொருள் எண்.8**

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் திட்ட பிரேரணைகள் தயார் செய்ய புகைப்படம் மற்றும் வரைபடங்கள் கலர் பிரிண்ட் எடுக்கப் பயன்படும் HP Laser Colour Printer —க்கு Tonner காலியாகி விட்டதால் புதியதாக 12 எண்ணிக்கையில் (Block -3, Yellow-3, Magenta- 3, Blue - 3) Tonner வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,20,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.7212/2021/இ1)**

**பொருள் எண்.9**

திருச்செங்கோடு நகராட்சியில் இயங்கி வரும் வாகனங்களுக்கு பயன்படுத்தப்பட்டு உபயோகமற்று இருப்பில் உள்ள கீழ்கண்ட டயர் மற்றும் டியூப்களை அரசு நிர்ணயித்த விலை விகிதத்தில் உள் (போக்குவரத்து துறையின் அரசாணை நிலை எண்.503, நாள்.19.12.2020 ன்படி அரசு அங்கீகரிக்கப்பட்ட பெரியப்பட்டி அருந்ததியர் காலணி மற்றும் டயர் பொருட்கள் உற்பத்தியாளர்கள் குடிசை தொழில் கூட்டுறவு சங்கம் TNKVI 65, சிங்கிலிபட்டி, எல்கணவாய்பட்டி, நாமக்கல் என்ற நிறுவனம் இவ்வலுவலக கருவூலத்தில் தொகை செலுத்தி டயர்களை எடுத்து செல்ல மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | டயர் மற்றும் டியூப் விவரம் | எண்ணிக்கை | அரசு நிர்ணயித்த ஒன்றின் விலை | கருவூலத்தில் செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஜே.சி.பி. டயர் | 4 | 405/— | 1620/— |
| 2 | டிப்பர் டயர் | 2 | 405/— | 810/— |
| 3 | லாரி டயர் | 4 | 405/— | 1620/— |
| 4 | ஈச்சர் டயர் | 36 | 250/— | 9000/— |
| 5 | கார் டயர் | 4 | 162/— | 648/— |
| 6 | கார் டியூப் | 5 | 80/— | 400/— |
| | | | **மொத்தம்** | **14,098** |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ரூ.14098/—ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்தி காலணி மற்றும் டயர் பொருட்கள் உற்பத்தியாளர் குடிசை தொழில் கூட்டுறவு சங்கதினர் டயர் மற்றும் டியூப்களை எடுத்து செல்ல மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.6337/2021/எச்1)**

**பொருள் எண்.10**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN 34 AA 9084 காம்ப்பேக்டர் லாரியில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தும், பெயிண்டிங் ஒர்க்ஸ், எழுத்து பணி மற்றும் தகுதி சான்று புதுப்பிக்கும் கட்டணம் ஆகிய பணிகளை மேற்க்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.80,000/—க்கும் ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. TN 34 AA 9084 வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண்.2141/2021/எச்2)**

**பொருள் எண்.11**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பிரிவு வாகன எண்.TN 28 W5257 குடிநீர் கொண்டு செல்லும் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தும், தகுதி சான்று புதுப்பித்து தரும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்க்கொள்ளவும் பழுதுகளை சரி செய்து தகுதி சான்று புதுபித்து வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.90,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்ககாம்.

**(கோப்பு எண்.7063/2020/எச்2)**

**பொருள் எண்.12**

திருச்செங்கோடு நகராட்சியில் இயங்கி வரும் வாகனம் எண். TN 34 T 999 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய உள்ளாட்சி தேர்தல் பணி முக்கியத்துவம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் அரசு சார்பு நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் நிறுவனம் வழங்கிய விலை விகித தொகை ரூ.8900/—ஐ ஏற்று தேர்தல் கால அவசரத்தின் அவசியத்தின் அடிப்படையில் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்காணும் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் நிறுவனம் வழங்கிய விலை விகிதத்தினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.7790/2021/எச்2)**

**பொருள் எண்.13**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையை (Daily Market) மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள தற்போதுள்ள இடத்தில் மண் பரிசோதனை செய்யவும் மற்றும் Structural Design செய்யவும் கோயமுத்தூர் தொழில்நுட்ப கல்லூரி (CIT) (அரசு உதவிப்பெறும்), கோயமுத்தூர் கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| மண் பரிசோதனை கட்டணம் | – | ரூ. 56,000 |
| Structural Design கட்டணம் | – | ரூ. 1,10,000 |
| **மொத்தம்** | **–** | **ரூ. 1,66,000** |

மேற்கண்ட பணிகளை அரசு உதவிப் பெறும் கோயமுத்தூர் தொழில் நுட்ப கல்லூரி மூலம் மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான செலவினம் ரூ.1,10,000/—க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதி மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையாளர் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.5760/2021/இ1)**

**பொருள் எண்.14**

அரசாணை எண்.70, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.09.2021–ன்படி **“கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம்” (KNMT)**-ன் கீழ் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூ.1000.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி திருச்செங்கோடு நகராட்சியில் வார்டு டி, பிளாக் 1, நகரளவை எண்.31–ல் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் தினசரி மார்க்கெட்டை நவீன முறையில் வடிவமைத்து புதுப்பிக்க பிரேரணைகள் “டுபிட்கோ” நிறுவனத்திடம் சமர்பிக்கப்பட்டது. மேலும் மேற்கண்ட பிரேரணையில் Design (வடிவமைப்பு) Drawing, Soil test, 3D Drawing ஆகிய பணிகள் கலந்தாலோசகர் (Consultant) நியமித்து பணியின் அவசரம் அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ள தோராய மதிப்பீடு ரூ.3,80,000/– தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே பணியின் அவசரம் அவசியம் கருதி ரூ.3,80,000/– மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.5760/2021/இ1)**

**பொருள் எண்.15**

29.10.2021–ம் தேதிய தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதியின்படி, கீழ்கண்ட பணிக்கு 16.11.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி கோரிய நிறுவனத்தின் பெயர் | கொடுத்துள்ள விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சி வார்டு டி, பிளாக் 1, நகரளவை எண்.31–இல் உள்ள தினசரி மார்க்கெட்டை புதுப்பிக்க நவீன முறையில் Design, Drawing, Soil test, and 3d Drawing தயார் செய்யும் பணி | ரூ. 3.80 இலட்சம் | 1. Smart Builders, Tirupur | மதிப்பீட்டை விட (–) 0.10% குறைவு |
| | | | 2. Sun Agencies, Tirupur | மதிப்பீட்டை விட (+) 1.50% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கோரிய “Smart Builders, Tirupur” நிறுவனம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலையான மதிப்பீட்டை விட (–)0.10% குறைவு என்ற ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(கோப்பு எண்.5760/2021/இ1)**